பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

09 09 2025 TUESDAY 7.15 PM

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவால் பாதிக்கப்பட்டுள்ள இமாச்சலப்பிரதேசம் மற்றும் பஞ்சாப் மாநிலங்களுக்கு நிவாரண உதவிகளை பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

- சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், மறுசுழற்சி மற்றும் மறு பயன்பாடு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை மத்திய அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ் வலியுறுத்தியுள்ளார்.

- தமிழகத்தில், சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு ராஜேந்திரன் கூறியுள்ளார்.

- நேபாளத்தில் வன்முறைச் சம்பவங்கள் நீடித்து வரும் நிலையில், அந்நாட்டு பிரதமர் திரு கே பி ஷர்மா ஒலி தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

- உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Nikhat Zareen காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

-இனி விரிவான செய்திகள்-

<<<<<<<>>>>>>>

வெள்ளப்பெருக்கு மற்றும் நிலச்சரிவால் பாதிக்கப்பட்டுள்ள இமாச்சலப்பிரதேசம் மற்றும் பஞ்சாப் மாநிலங்களுக்கு நிவாரண உதவிகளை பிரதமர் திரு நரேந்திர மோடி அறிவித்துள்ளார்.

பஞ்சாப் மாநிலத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளை விமானம் மூலம் பார்வையிட்ட பிரதமர், ஆயிரத்து 600 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார்.

மீட்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தேசிய மற்றும் மாநில பேரிடர் மீட்புப்படையினருடன் அவர் கலந்துரையாடினார்.

பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்த கருத்துக்களை பிரதமர் பொறுமையுடன் கேட்டறிந்ததாக பஞ்சாப் மாநில பிஜேபி தலைவர் திரு சுனில் ஜக்கார் தெரிவித்தார்.

முன்னதாக, இமாச்சலப்பிரதேசத்தில் கனமழை மற்றும் நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளை ஆய்வு செய்த பிரதமர், சேத விவரங்கள் குறித்து அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

இம்மாநிலத்தில் மறுசீரமைப்பு பணிகளுக்காக ஆயிரத்து 500 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்படும் என்று பிரதமர் அறிவித்துள்ளார்.

<<<<<<<>>>>>>>

சுற்றுச்சூழல் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், மறுசுழற்சி மற்றும் மறு பயன்பாடு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை அத்துறைக்கான அமைச்சர் திரு பூபேந்தர் யாதவ் வலியுறுத்தியுள்ளார்

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், காற்று மாசுபாட்டை குறைப்பதற்கான நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொண்ட நகரங்களுக்கு விருதுகளை அவர் வழங்கினார்.

கழிவுகளை அகற்றும் நடவடிக்கைகளை கட்டுப்படுத்தும் வகையில் சுழற்சி பொருளாதார அடிப்படையிலான முன்முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

தேசிய அளவில் காற்றின் தரத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் இந்தூர், ஜபல்பூர், ஆக்ரா மற்றும் சூரத் நகரங்கள் முன்னணியில் உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தூய்மையான காற்றை உறுதி செய்வதற்கான தேசிய திட்டத்தின்மூலம் காற்றின் தரம் மேம்பட்டு வருவதாக திரு பூபேந்தர் யாதவ் கூறினார்.

<<<<<<<>>>>>>>

நாட்டின் கிழக்கு மாநிலங்களில் மின்சார வாகனங்களுக்கான மின்கலன் உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு தேவையான வசதிகள் ஏற்படுத்தப்படும் என்று மத்திய நுகர்வோர் விவகாரத்துறை அமைச்சர் திரு பிரல்ஹாத் ஜோஷி தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அந்த அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், மின்சார வாகனங்களில் பயன்படுத்தப்படும் மின்கலன்களின் செயல்பாடுகள் குறித்த சர்வதேச தரத்திலான பரிசோதனைகள், சான்றிதழ்கள், அவற்றின் பாதுகாப்பு, செயல்பாடு, ஒழுங்குமுறை நடைமுறைகள் ஆகியவையும் உறுதி செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மின்சார வாகனங்களின் பயன்பாட்டை அதிகரிக்கும் வகையிலும், இறக்குமதியை சார்ந்திருக்கும் நிலையை குறைக்கும் வகையிலும் பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு தொடர்ந்து மேற்கொண்டு வருவதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறைந்த செலவில் மின்சார வாகன பரிசோதனை சேவைகளுடன், உள்நாட்டு உற்பத்தியாளர்களுக்கு உத்வேகம் அளிக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>>

விண்வெளித்துறையில் இந்தியா தொடர்ந்து சாதனை படைத்து வருவதாக இஸ்ரோ தலைவர் திரு நாராயணன் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர், வரும் 2040-ஆம் ஆண்டிற்குள் நிலவுக்கு மனிதனை அனுப்புவதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக கூறினார்.

வளர்ச்சியடைந்த இந்தியாவாக உருவெடுக்கும் வகையில், நாடு முன்னேற்றப்பாதையில் சென்று கொண்டிருப்பதாக திரு நாராயணன் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>>

தமிழகத்தில், சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநில அமைச்சர் திரு ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, சென்னையில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய அவர், நாட்டிலேயே உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகையில் தமிழகம் இரண்டாவது இடத்தில் உள்ளதாக தெரிவித்தார்.

தமிழகத்தில் பொழுதுபோக்கு, பாரம்பரியம், ஆன்மிகம், பண்பாடு, மருத்துவம் மற்றும் புராதன சின்னங்கள் சுற்றுலா என பல்வேறு வகையான சுற்றுலாத்தலங்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயணிகளை வெகுவாக ஈர்த்து வருவதாக அவர் கூறினார்.

மாவட்டந்தோறும் சுற்றுலாத் தலங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை கட்டமைப்பு வசதிகள் உள்ளிட்ட பல்வேறு வசதிகளை மாநில அரசு மேம்படுத்தி வருவதாக திரு ராஜேந்திரன் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>>

நேபாளத்தில் வன்முறைச் சம்பவங்கள் நீடித்து வரும் நிலையில், அந்நாட்டு பிரதமர் திரு கே பி ஷர்மா ஒலி தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

சமூக வலைதளங்களுக்கு அந்நாட்டு அரசு தடை விதித்ததற்கு எதிராக நடந்த போராட்டங்களை கட்டுப்படுத்த நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டின்போது ஏற்பட்ட உயிரிழப்புகளுக்கு பொறுப்பேற்க வலியுறுத்தி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பால்கோட் பகுதியில் உள்ள பிரதமரின் இல்லத்திற்கு போராட்டக்காரர்கள் தீ வைத்தும், அரசுக்கு எதிரான கோஷங்களை எழுப்பியும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

துணை பிரதமர், அமைச்சர்கள் மற்றும் பிரதான எதிர்க்கட்சித் தலைவரின் வீடுகளும் தாக்குதலுக்கு உள்ளானதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனையடுத்து, காத்மாண்டுவில் பல்வேறு இடங்களிலும், லலித்பூர் மற்றும் பக்தாபூர் மாவட்டங்களிலும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கு அமலில் உள்ள காலத்தில் சுகாதார சேவைகள், பத்திரிகை மற்றும் அத்தியாவசிய சேவைகள் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளது.

காத்மாண்டு விமான நிலையம் மூடப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் மேலும் தெரிவிக்கிறார்.

இதனிடையே, நேபாளத்திற்கு பயணம் மேற்கொள்வதை இந்தியர்கள் தவிர்க்குமாறு வெளியுறவு அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

<<<<<<<>>>>>>>>

இந்தியா – மெக்சிகோ இடையேயான நல்லுறவை வலுப்படுத்துவதற்கு இந்தியாவிற்கான மெக்சிகோ தூதர் Federico Salas பங்காற்றியுள்ளதாக வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவிட்டுள்ள அவர், பதவிக்காலம் முடிந்து செல்லும் அவருக்கு வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<<>>>>>>>>

மெக்சிகோவில் பேருந்து மீது ரயில் மோதி ஏற்பட்ட விபத்தில் 10 பேர் உயிரிழந்தனர். 60-க்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

இந்த விபத்துக்கான காரணம் குறித்து தெரியவில்லை என்று அந்நாட்டு சிவில் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

<<<<<<<>>>>>>>>

மத்திய அரசு மேற்கொண்ட சரக்கு மற்றும் சேவை வரி சீர்திருத்த நடவடிக்கைக்கு அனைத்துத் தரப்பினரும் வரவேற்பு தெரிவித்து வருகின்றனர்.

நான்கு அடுக்குகளாக இருந்த வரிகளை இரண்டு அடுக்குகளாக மாற்றியமைத்துள்ள மத்திய அரசின் நடவடிக்கைகள் வரவேற்கத்தக்கது என்று தமிழகத்தின் மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த சிறு-குறு நடுத்தர தொழில் உற்பத்தியாளர் சங்கத் தலைவர் திரு கோடீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

<u>(Voice Byte – கோட்டீஸ்வரன் – 31 Sec.)</u>

<<<<<<<>>>>>>>>

<u>விளையாட்டுச் செய்திகள்</u>

உலக குத்துச்சண்டை சாம்பியன் போட்டியில் இந்தியாவின் *Nikhat Zareen* காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இங்கிலாந்தின் *Liverpool*-ல் நடைபெற்று வரும் இப்போட்டியின் 51 கிலோ எடைப்பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் அவர், ஜப்பானின் *Nishinaka Yuna* -வை வென்றார்.

---------------

ஹாங்காங் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் சிராக் ஷெட்டி – ரங்கி ரெட்டி இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 21-13, 18-21, 21-10 என்ற செட் கணக்கில், தைவானின் *Hsiang Chiu – Wang Chi-lin* இணையை வென்றது.

-------

சீனாவில் நடைபெற்றுவரும் சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் *Ria Bhatia* – பிரான்சின் *Carole Monnet* இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 7-5, 7-6 என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் *Hanna Chang* – சீனாவின் *Xiaodi You* இணையை வென்றது.

---------

ஆசியா பசிபிக் கோல்ஃப் சாம்பியன் போட்டி அடுத்த மாதம் 23-ஆம் தேதி முதல், 26-ஆம் தேதிவரை துபாயில் நடைபெறுகிறது.

இப்போட்டியில் இந்தியாவின் சார்பில், *Raghav Gulati, Ranveer Mitroo, Anshul Mishra* மற்றும் *Rakshit Dahiya* ஆகியோர் பங்கேற்கின்றனர்.

<<<<<<<END>>>>>>>